பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

31 01 2025 **FRIDAY** **7.15 AM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடர் இன்று தொடங்குகிறது. இதில் பொருளாதார ஆய்வறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது.
2. வளர்ச்சி அடைந்த இந்தியாவுக்கான பயணத்தில் தேசம் விரைந்து முன்னேறி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
3. அனைத்துத் துறைகளிலும் நாடு கடந்த பத்து ஆண்டுகளில் மிகப் பெரும் வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.
4. அமெரிக்காவில் ஏற்பட்ட விமான விபத்தில் அதில் பயணித்த 64 பேரும் உயிரிழந்தனர்.
5. 19 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் உலக கோப்பை டுவெண்டி – டுவெண்டி கிரிக்கெட் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

*----- இனி விரிவான செய்திகள் ---*

<<<<<<>>>>>

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடர் இன்று தொடங்குகிறது.

இரு அவைகளின் கூட்டுக்கூட்டத்தில் குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு உரையாற்றுகிறார்.

குடியரசுத் தலைவர் உரை முடிந்தவுடன் பொருளாதார ஆய்வறிக்கை சமர்ப்பிக்கப்படும்.

நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன், வரும் நிதியாண்டுக்கான பட்ஜெட்டை நாளை தாக்கல் செய்ய உள்ளார்.

இதனைத்தொடர்ந்து, குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம் மீதான விவாதமும், பட்ஜெட் மீதான விவாதமும் அடுத்த மாதம் 13-ஆம் தேதிவரை நடைபெறும்.

இதன் பின்னர் இரண்டாம் கட்ட பட்ஜெட் கூட்டத்தொடர் மார்ச் மாதம் 10-ஆம் தேதி தொடங்க உள்ளது.

இந்த கூட்டத்தொடரில் 16 மசோதாக்கள் தாக்கல் செய்யப்பட உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.

<<<<<<>>>>>

வளர்ச்சி அடைந்த இந்தியாவுக்கான பயணத்தில் தேசம் விரைந்து முன்னேறி வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் இதனை தெரிவித்துள்ளார்.

கடந்த ஒரு மாத காலத்தில் வளர்ச்சி தொடர்பாக நடைபெற்ற நிகழ்ச்சிகள் குறித்தும், அதில் தாம் பங்கேற்றது குறித்தும் பிரதமர் பெருமிதம் தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள மற்றொரு பதிவில், விண்வெளித்துறையில் வேகமான வளர்ச்சி எட்டப்பட்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

கடந்த பத்தாண்டுகளில் நாட்டின் விண்வெளி சாதனைகள் குறித்தும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2014-ல் பிஜேபி ஆட்சிக்கு வந்தபிறகு 457 செயற்கைக்கோள்கள் விண்ணில் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

2014-ஆம் ஆண்டுக்கு முன்பு 35 ஆண்டுகளில் 106 செயற்கைக்கோள்கள் மட்டுமே செலுத்தப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த பத்தாண்டுகளில் 398 வெளிநாட்டு செயற்கைக்கோள்கள் செலுத்தப்பட்டுள்ளதாகவும் அதற்கு முன்பு 35 ஆண்டுகளில் 35 வெளிநாட்டு செயற்கைக்கோள்கள் மட்டுமே செலுத்தப்பட்டதாகவும் திரு நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

அனைத்துத் துறைகளிலும் நாடு கடந்த பத்து ஆண்டுகளில் மிகப் பெரும் வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசின் பத்தாண்டு சாதனைகள் குறித்த நூல் வெளியீட்டு விழா புதுதில்லியில் நேற்று நடைபெற்றது.

இதில் பங்கேற்று பேசிய திரு அமித் ஷா, மத்திய அரசு மேற்கொண்ட ஒவ்வொரு நடவடிக்கையும் நாட்டில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தி வருவதாக கூறினார்.

கடந்த பத்தாண்டுகளில் சவால்களை கடந்து, நாடு சாதனைகளை படைத்து வருவதாக அவர் குறிப்பிட்டார்.

கோவிட் பெருந்தொற்றை வெற்றிகரமாக எதிர்கொண்ட இந்தியா, மற்ற நாடுகளுக்கும் உதவிகளை வழங்கியிருப்பதாக அவர் கூறினார்.

அனைவருக்கும் பாதுகாப்பான குடிநீர், மின்சாரம், தரமான சுகாதார சேவைகள் உள்ளிட்டவற்றை வழங்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

2014-ஆம் ஆண்டு முதல் பிஜேபி தலைமையிலான மத்திய அரசு மேற்கொண்டுவரும் பணிகள், அடுத்த 25 ஆண்டுகால வளர்ச்சிக்கு வலுவான அடித்தளமாக அமைந்துள்ளதாக அவர் கூறினார்.

2047-ஆம் ஆண்டு வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை அடைவதில் இளைஞர்கள் முக்கிய பங்காற்ற வேண்டும் என்று திரு அமித் ஷா கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனம் எரிசக்தி உற்பத்தியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை ஆற்றி வருவதாக மத்திய சுரங்கத்துறை அமைச்சர் திரு கிஷன் ரெட்டி கூறியுள்ளார்.

இந்நிறுவனத்தின் செயல்பாடுகள் தொடர்பாக நேற்று சென்னையில் அவர் ஆய்வு மேற்கொண்டார்.

இதுதொடர்பாக, சமூக வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், முக்கிய திட்டங்களை விரைந்து செயல்படுத்துவது குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டதாகவும், நீடித்த வளர்ச்சியில் இந்நிறுவனம் முக்கிய பங்காற்றி வருவதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்ச்சியில், என் எல் சி –யின் செயல்பாடுகளை விளக்கும் வகையிலான புகைப்படங்கள், ஆவணங்கள் கொண்ட அருங்காட்சியகத்தையும், என் எல் சி-யின் புதுப்பிக்கப்பட்ட இணையதளத்தையும் திரு கிஷன் ரெட்டி தொடங்கிவைத்தார்.

பின்னர் மதுரை மாவட்டம் அ.வல்லாளப்பட்டியில் டங்ஸ்டன் சுரங்க ஏலம் ரத்து செய்யப்பட்டதற்காக நடத்தப்பட்ட பாராட்டு விழாவிலும் அமைச்சர் பங்கேற்றார்.

<<<<<<>>>>>

இனி மகா கும்பமேளா குறித்த செய்திகள்.

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்)*

உத்தரப்பிரதேச மாநிலம் பிரயாக்ராஜில் நடைபெற்றுவரும் மகா கும்பமேளாவில் இதுவரை 29 கோடியே 64 லட்சம் பக்தர்கள் புனித நீராடியுள்ளதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.

நேற்று ஒரேநாளில் 2 கோடியே 6 லட்சம் பேர் நீராடியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கும்பமேளாவில் பெண்கள் பாதுகாப்புக்கு உயர் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக அம்மாநில அரசு கூறியுள்ளது.

படித்துறைகளில் பெண் காவல்துறையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும், பெண்களுக்கென கூடுதலாக உடை மாற்றும் அறைகள் மற்றும் கழிவறைகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய ரயில்வே அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ், மகா கும்பமேளாவையொட்டி, பிரயாக்ராஜுக்கு 13 ஆயிரத்து 450 சிறப்பு ரயில்கள் இயக்கப்படுவதாக கூறினார்.

இதுவரை ஆயிரத்து தொள்ளாயிரம் சிறப்பு ரயில் சேவைகள் இயக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மௌனி அமாவாசை நாளில் 364 ரயில்கள் இயக்கப்பட்டதாக திரு அஷ்வினி வைஷ்ணவ் கூறினார்.

*(சவுண்ட் பைட் - **Song - 8** செகண்ட்ஸ்)*

**<<<<<<>>>>>**

நாட்டில் கடந்த பத்தாண்டுகளில் தொழில்நுட்பங்கள் மூலம் நிர்வாகம் பெரிய அளவில் மேம்பட்டுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

நல்லாட்சி தொடர்பான இரண்டு நாள் தேசிய மாநாட்டை காந்தி நகரில் நேற்று அவர் தொடங்கிவைத்தார்.

பொதுமக்கள் குறைதீர்ப்பு நடைமுறைகள் திறம்பட மேற்கொள்ளப்படுவதாக அவர் கூறினார்.

நிர்வாக சீர்திருத்தங்கள் காரணமாக மக்களின் சிக்கல்கள் குறைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

தேவையற்ற இரண்டாயிரம் சட்டங்கள் நீக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

நிர்வாகத்தில் வெளிப்படைத்தன்மை அதிகரித்துள்ளதாகவும் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

**<<<<<<>>>>>**

மின்துறையில் சீர்திருத்தங்கள் இத்துறையின் நிர்வாகத்தை மேம்படுத்தும் என்று மத்திய மின்துறை இணையமைச்சர் திரு ஸ்ரீபத் நாயக் கூறியுள்ளார்.

மாநில மின்துறை அமைச்சர்களுடன் காணொலி வாயிலாக நடைபெற்ற ஆலோசனைக்கூட்டத்தில் அவர் நேற்று பேசினார்.

ஸ்மார்ட் மீட்டர்கள் பொருத்தப்படுவதன் மூலம், கணக்கீட்டின் துல்லியம் அதிகரிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

பிரதமரின் சூரியசக்தி மேற்கூரை திட்டம் குறித்தும் இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

தமிழகத்தில் மின்துறையில் மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்கள் குறித்து மாநில மின்துறை அமைச்சர் திரு செந்தில் பாலாஜி இக்கூட்டத்தில் எடுத்துரைத்தார்.

**<<<<<<>>>>>**

அமெரிக்காவில் ஏற்பட்ட விமான விபத்தில் அதில் பயணித்த 64 பேரும் உயிரிழந்தனர்.

இந்த அமெரிக்க ஏர்லைன்ஸ் விமானம் மற்றொரு ஹெலிகாப்டருடன் மோதி ஆற்றில் விழுந்தது.

அதில் பயணித்த அனைவரும் உயிரிழந்தது உறுதி செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு அதிபர் திரு டொனால்டு ட்ரம்ப் கூறியுள்ளார்.

வெள்ளை மாளிகையில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த விபத்துக்கான காரணம் குறித்து ஆய்வு செய்யப்படும் என்று தெரிவித்தார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

19 வயதுக்கு உட்பட்டோருக்கான மகளிர் உலக கோப்பை டுவென்டி – டுவென்டி கிரிக்கெட் போட்டியின் அரையிறுதி ஆட்டத்தில் இந்தியா இன்று இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

கோலாலம்பூரில் இன்று பிற்பகல் 12 மணிக்கு இப்போட்டி தொடங்குகிறது.

இன்று காலை நடைபெறும் மற்றொரு அரையிறுதி ஆட்டத்தில், ஆஸ்திரேலியா – தென்னாப்பிரிக்காவை எதிர்கொள்கிறது.

<<<<<<>>>>>

இந்தியா - இங்கிலாந்து இடையேயான நான்காவது டுவெண்டி - டுவெண்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

புனேவில் இரவு 7 மணிக்கு இப்போட்டி தொடங்குகிறது.

ஐந்து போட்டிகளை கொண்ட இத்தொடரில், 2-1 என்ற கணக்கில் இந்தியா முன்னிலையில் உள்ளது.

<<<<<<>>>>>

துனிஷியாவில் நடைபெற்றுவரும் சர்வதேச மகளிர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் **Diva Bhatia** - இங்கிலாந்தின் **Sapfo** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, 6-1, 6-1 என்ற செட் கணக்கில், சீனாவின் **Jiayou Li – Ruirui Zou** இணையை வென்றது.

<<<<<<>>>>>

சிங்கப்பூர் **Smash** டேபிள் டென்னிஸ் போட்டியின் தகுதி சுற்று ஆட்டங்களில் இந்தியாவின் மனவ் தாக்கர், மனுஷ் ஷா ஆடவர் பிரிவிலும், **Diya Chitale** மகளிர் பிரிவிலும் இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளனர்.

<<<<<<>>>>>

தேசிய விளையாட்டுப்போட்டியில், பதக்கப்பட்டியலில் கர்நாடகா தொடர்ந்து முன்னிலையில் உள்ளது.
ஏழு தங்கம், 3 வெள்ளி, 2 வெண்கலப்பதக்கங்களை அம்மாநிலம் வென்றுள்ளது.
தமிழகம் 3 தங்கம், 4 வெள்ளி, 3 வெண்கலப்பதக்கங்களுடன் தமிழகம் ஐந்தாவது இடத்தில் உள்ளது.

<<<<<<>>>>>

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் கேரளா அணி – சென்னை அணியை வென்றது.
சென்னையில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், கேரளா அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

<<<<<<END>>>>>